தி.மு.க. மீனவர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

21 - ஆம் பக்கத் தொடர்ச்சி

துணை அமைப்பாளர்கள் - 1) மா.வேல்ராஜ், 1/17, சிதம்பர நகர், விளாத்திகுளம். 2) மா.முனிஸ்வரன், 43, சிதம்பரநகர், விளாத்திகுளம். 3) முத்துப்பாண்டி சிதம்பரநகர், விளாத்திகுளம்.

புதூர் பேரூர்

அமைப்பாளர் - செ. கண்ணன், ரவுண்டம்மன் கோவில், 2 வது தெரு, புதூர் -628905

துணை அமைப்பாளர்கள் - 1) வீ. மகாலிங்கம், அண்ணா நெடுஞ்சாலை, புதூர் - 628905. 2) பா.அருண்குமார், சன் மார்க் சங்கத் தெரு, புதூர் - 628905. 3) செ.யுவராஜ், சன் மார்க் சங்கத் தெரு, புதூர் 628905.

எட்டயபுரம் பேரூர்

அமைப்பாளர் - ச.கந்தகுமார், 45, ஓடைக்கடை பஜார், 1வது தெரு, நடுவிற்பட்டி, எட்டயபுரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) மு.செய்யது அலி, 28, புது அம்மன் கோவில் தெரு, நடுவிற்பட்டி, எட்டயபுரம். 2) ச. சாலமன், 2, உமறுபுலவர் தெரு, எட்டயபுரம். 3) மு.தங்க மாரியப்பன், 2/2, காளியம்மன் கோவில் தெரு, எட்டயபுரம்.

கடம்பூர் பேரூர்

அமைப்பாளர் - பா.வசந்த செல்வம், 56/2, அரண்மனை வீதி, கடம்பூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) கா.ரமேஷ், 21/2, கார்வி ரோடு, கடம்பூர். 2) ம.மகேஸ்வரன், 8/9, காளியம்மன் கோவில்தெரு, கடம்பூர். 3) இ.மாடசாமி, 34/9,நாரயணசா மிகோவில்தெரு, கடம்பூர்.

கயத்தார் பேரூர்

அமைப்பாளர் - செ.அந்தோணிச்சாமி, 12எ, சின்னபிள்ளையார் கோவில் தெரு, கயத்தார்.

துணை அமைப்பாளர்கள் - 1) பா.அந்தோணிசிங் ராஜ், 7/4, சந்தனமாதா கோவில் தெரு, ஆஸ்பத்திரி ரோடு, கயத்தார். 2) ஆ.திரவிய ராஜ், 9/4, ஆரோக்கியமாதா கோவில் தெரு, கயத்தார். 3) மு.லெட்சுமணன், 32, கட்டபொம்மன் தெரு, கயத்தாறு.

கழுகுமலை பேரூர்

அமைப்பாளர் - ம.ஞானச்சுடர், 10டி- பசும்பொன் நகர், கழு குமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட் டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) சு.மாரிராஜ், 14, அரண்மனை வாசல்தெரு, கழுகுமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத்துக்குடி மாவட்டம். 2) ரா.நடராஜன், 19, அம்பேத்கார் நகர், கழுகுமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத் துக்குடி மாவட்டம். 3) சு.முனியாண்டிராஜ், 33,குமரேசன் நகர் - 1, கழுகுமலை - 628552, கோவில்பட்டி வட்டம், தூத் துக்குடி மாவட்டம்.

தூத்துக்குடி மாநகரம்

போல்பேட்டை பகுதி

அமைப்பாளர் - மா. கார்த்திக், 360, அழகேசபுரம்,1ம் தெரு, தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) ச.பேச்சியம்மாள், 315, அம் பேத்கர் நகர், தூத்துக்குடி. 2) மு.கோமதி சங்கர், 131, அழ கேசபுரம், தூத்துக்குடி. 3) மா.விக்னேஸ்வரன், 370, அழ கேசபுரம், 1வது தெரு, தூத்துக்குடி. 4) கா.சுப்ரமணி (எ)பிரபு, 7/1, சுந்தரவேல்புரம் மேற்கு, தூத்துக்குடி. 5) இ.குமாரமுத்து, 45/2, முத்துகிருஷ்னாபுரம், 2வது தெரு, தூத்துக்குடி.

திரேஸ்புரம் பகுதி

அமைப்பாளர் - தா.இலையன்ஸ், 292எ, திரேஸ்புரம், தூத் துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) லூ.ஸ்டார்வின், 4/183, லூர்த் தம்மாள்புரம், தூத்துக்குடி. 2) அ.ரொபிட்டன், 54-பி, ஜார்ஜ் தெரு, தூத்துக்குடி. 3) மா.மரியசிலுவை, பூபால்ராயர்புரம் தூத்துக்குடி. 4) வி.ரிச்சர்ட், 32, சின்னகடை தெரு, தூத்துக் குடி. 5) மு.முனிஸ்வரன், 281/150எ, மாதவநாயர் காலனி, திரேஸ்புரம், தூத்துக்குடி.

சண்முகபுரம் பகுதி

அமைப்பாளர் - பி.ஜெர்மாஸ், 24, வண்ணார், 2து தெரு, தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) மோ.கபோ, 75, முத்து தெரு, தூத்துக்குடி. 2) ரா.வேல்மாரியப்பன், 29, பங்களா தெரு, தூத்துக்குடி. 3) பெ.ராமர், பாண்டுரெங்கன் தெரு, தூத்துக் குடி. 4) ச.செந்தில்குமார், 81, ராமசாமி தெரு, தூத்துக்குடி. 5) இ.மணிமுத்து, 71, ராஜமன்னர் தெரு, தூத்துக்குடி.

அண்ணாநகர் பகுதி

அமைப்பாளர் - கே.டைட்டஸ், டி4 மீன்வளக்கல்லூரி குடியி ருப்பு, ஆசிரியர் காலனி, தூத்துக்குடி.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா.நரேஷ், 51, அண்ணா நகர், 2வது தெரு, தூத்துக்குடி. 2) செ.முத்துராம்குமார், 124சி.கே.வி.கே. நகர், முதல் தெரு, தூத்துக்குடி. 3) எம். ராமசந்திரன், 1ஜி/849, ராஜகோபால் நகர், 5வது தெரு, தூத் துக்குடி. 4) ஞா.ராபின்சன், 107/126/1எ, மில்லர்புரம், தூத் துக்குடி.

பிரையண்ட் நகர் பகுதி

அமைப்பாளர் - பி.செல்வம், 316/12, இந்திரா நகர், ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3.

துணை அமைப்பாளர்கள் - 1) கெ.நிஷா, 269சி, கீதா ஜீவன் நகர், ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3. 2) அ.ஷேக் முகமது, 316/18, ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3. 3) மோ.குட்விண் மில்டன், 35/11, பிரையண்ட் நகர், 12 வது தெரு, தூத்துக்குடி - 3. 4) எ. பிரமிலஸ், 30எ, பாத்திமா நகர், 2வது தெரு, தூத் துக்குடி - 3. 5) எ. ரமேஷ், 316, ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி - 3.

முத்தையாபுரம் பகுதி

அமைப்பாளர் - எம்.மாரியப்பன், சுனாமிகாலனி, கேம்ப் -II, தூத்துக்குடி - 6.

துணை அமைப்பாளர்கள் - 1) குருசாமி, 1-5-4, முனியசாமி கோவில் தெரு, முத்தையாபுரம், தூத்துக்குடி - 5. 2) பி.மாரி யப்பன், 128, சுனாமிகாலனி, கேம்ப்-II, தூத்துக்குடி - 6. 3) பி.பொன்ஹரிகான், 1/13, கீழத்தெரு, முள்ளக்காடு, தூத்துக் குடி - 5. 4) கே. சண்முகவேலாயுதம், 95, டைப் - I, பாரதி நகர், புதியதுறைமுகம், தூத்துக்குடி - 6. 5) என்.சுரேஷ், 4-25, தெரு, முத்தையாபுரம், தூத்துக்குடி - 5.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-04-2025.

டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. மீனவர் அணி.

திருவள்ளூர் மாவட்டம்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாரத்தான் போட்டி!

அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் ஏப் 07; திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந் திட்ட வளாகத்திலுள்ள விளையாட்டு மைதானத்தில் டாக்டர் கலைஞர் நூற் றாண்டு விழாவை முன் னிட்டு நடைபெற்ற மாரத் தான் போட்டி நடைபெற்றது இதில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு போட்டியினை கொடியசைத்து துவக்கி வைத்தார் இதில் பின்னர் சிறுபான்மையினர் நலன் மற் றும் வெளிநாடு வாழ் தமிழர் கள் நலத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், திருவள்ளூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக செயல் படுத்திட பள்ளி, கல்லூரி மாணவ/மாணவியர்களுக்கு மற்றும் பொதுமக்கள் (இரு பாலருக்கும்) ஆகியோர்க ளுக்கு விழிப்புணர்வு ஏற்ப டுத்தும் வகையில் மாரத்தான் போட்டி நேற்று நடைபெற்றது, . இதில் வயது வரம்பு 16 முதல் 35 வரை உடைய பள்ளி , கல் லூரி மாணவ / மாணவியர் கள் மற்றும் பொதுமக்கள் கலந்துக் கொண்டார்கள். 1. ஆண்களுக்கு . 20 கி.மீ தூரம் போட்டி துவங்கும் இடம். மாவட்ட விளை யாட்டரங்கம், திருவள்ளூர் திரும்பும் இடம் பூண்டி பேருந்து நிலையம் முடியும் இடம் . மாவட்ட விளை யாட்டரங்கம், திருவள்ளூர்

2. பெண்களுக்கு. 10 கி.மீ தூரம் வயது வரம்பு 16 முதல் 35 வரை போட்டி துவங்கும் இடம். மாவட்ட விளையாட்டரங்கம், திரு வள்ளூர்

திரும்பும் இடம் . கிருஷ்ணா நீர் கால்வாய் முடியும் இடம் . மாவட்ட விளையாட்டர ங்கம், திருவள்ளூர்

பரிசுத்தொகை முதலில் வரும் ஐந்து ஆண்களுக்கு தலா ரூ. 10,000 மற்றும் முதலில் வரும் ஐந்து பெண் களுக்கு தலா ரூ. 10,000 வீதம் வழங்கப்படும் என தெரிவித்தார் இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் திருத்தணி சட்ட மன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன் பயிற்றுநர்கள் லாவண்யா, காயத்ரி (கால் பந்து), லோகேஷ் குமார் உடற்கல்வி ஆசிரியர் தீபன் மற்றும் உடற்கல்வி ஆசிரி யர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரத்தில் ரூ. 4 கோடியே 20 லட்சம் மதிப்பீட்டில் - ஒருங்கிணைந்த

வணிக வரி துறை இணை ஆணையர் அலுவலக கட்டிடம்!

சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. பணிகளை துவக்கி வைத்தார்!

சென்னை, ஏப். 7-

தமிழ்நாடு அரசிற்கு முக் கிய வருவாயை பெற்று தரும் துறைகளில் ஒன்றாக வணிக வரித்துறை விளங்கி வருகிறது.

அத்தகைய வணிகவரித்து றைக்கு காஞ்சிபுரம் மண்ட லத்தில் உள்ள காஞ்சிபுரம், பூவிருந்தவல்லி, அம்பத்தூர், ஆகிய துணை ஆணையர் அலுவலகங்களை ஒருங்கி ணைத்த காஞ்சிபுரம் மாவட் டத்தின் தலைநகரான காஞ்சி புரத்தில் இணை ஆணையர் அலுவலகம் அமைத்திட வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் காஞ்சிபுரம் கோரிக்கை வைத்தார்.

காஞ்சிபுரம் எம்எல்ஏவின் கோரிக்கையை ஏற்று மாவட் டத்தின் தலைநகரான காஞ்சி புரத்தில் வணிகவரித்துறை இணை ஆணையர் அலுவல கம் அமைக்க தமிழ்நாடு முத லமைச்சர் மு க ஸ்டாலின் உத் தரவிட்டார்.

முதலமைச்சரின் உத்தர வின் படி வணிகவரித்துறை சார்பில் ஒருங்கிணைந்த இணை ஆணையர் அலுவல கம் அமைத்திட வணிகவரித் துறை அமைச்சர் 4 கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சி யர் அலுவலகம் வளாகத்தில் ஏற்கனவே செயல்பட்டு வரும் காஞ்சிபுரம் வணிகவரித் துறை அலுவலகம் அருகி லேயே 4 கோடியே 20 லட் சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த வணிகவரித் துறை இணை ஆணையர் அலுவலகம் அமைப்பதற் கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெற்றது.

அடிக்கல் நாட்டு விழாவில் காஞ்சிபுரம் எம்எல்ஏ சிவி எம்பி. எழிலரசன் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த வணிகவரித்துறை இணை ஆணையர் அலுவலகம் அமைப்பதற்கான கட்டுமான பணிக்கு அடி கல்லை நட்டு வைத்து பணிகளை தொடங்கி வைத்தார்.

அடிக்கல் நாட்டு விழாவில் காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், காஞ்சிபுரம் வணிகவரித் துறை இணை ஆணையர் வள்ளி, மாவட்ட பொருளா ளர் சன் பிராண்ட் கே ஆறுமு கம், காஞ்சிபுரம் மாநகர செய லாளர் சிகேவி. தமிழ்ச்செல்வன், மாநகர பகுதி செயலாளர் சந்துரு, திலகர், வெங்கடேசன்,

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் யுவ ராஜ், மற்றும் வணிகவரித் துறை அலுவலர்களும், ஏராள மான கட்சி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்

திருவையாறு தொகுதி - பூதலூர் ஒன்றியம்

இளங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்!

சட்டப் பேரவையில் உறுப்பினர் துரை.சந்திரசேகரன் கோரிக்கை!

சென்னை, ஏப். 7-

சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது திருவையாறு தொகுதி துரை. சந்திரசேகரன் கேட்ட கேள்வியும் அதற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அளித்த பதிலும் வருமாறு:-

துரை. சந்திரசேகரன் : திருவை யாறு தொகுதி, பூதலூர் ஒன்றி யம், இளங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய் யுமா?

அமைச்சர் மா.சுப்பிர மணியன்: பூதலூர் ஒன்றியம், இளங்காடு கிராமத்தைப் பொறுத்தவரை, இங்கு ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்த துணை சுகாதார நிலையம் மாரனேரி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. பூத லூர் ஒன்றியத்தில் ஏற்கெ னவே பாளையப்பட்டி, கோவிலடி மற்றும் மாரனேரி ஆகிய மூன்று ஆரம்ப சுகா தார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இளங்காடு து ணை சுகாதார நிலையத்திற்கு வருகிற பொது மக்களுக்கு இடைநிலை சுகா தார செவிலியர்மூலம் eSanje evani முறையில் மாரனேரி ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர்களோடு தொடர்புகொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இளங்காடு துணை சுகா தார நிலையத்திலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் மாரனேரி ஆரம்ப சுகாதார நிலையம், 5 கிலோ மீட்டர் தொலைவில், திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனை ஆகியவை செயல்பட்டு வருவதால், மக் கள்தொகையின் அடிப்படை யில் இளங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலை யம் அமைப்பதற்குரிய சாத்தி யக்கூறுகள் இல்லை.

துரை. சந்திரசேகரன்: இளங் காடு கிராமத்தில் துணை சுகா தார நிலையத்திற்குக் கட்ட டம் இல்லை. எனவே, அந்த நிலையத்திற்கு புதிய கட்ட டத்தை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா.

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: இளங்காடு கிராமத்திலிருக்கிற து ணை சுகாதார நிலையத்தைப் பொறுத்த வரை அதனுடைய கட்டடம் ஏற்கெனவே, பாழடைந்திருக் கிறது. அந்தத் துணை சுகாதார நிலையம் தற்போது வேறு ஒரு கட்டடத்தில் இயங்கி வருகி றது. இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தரப்படும்.

துரை. சந்திரசேகரன்: அமைச் சர் அவர்களுக்கு நன்றி. அதே போல, திருவையாறு தொகுதி யில் கல்யாணபுரம், செம்மங்குடி, விளாங்குடி, வர கூர், கூடநாணல் மற்றும் செங் கிப்பட்டி போன்ற பகுதிகள் கட்டடம் இல்லாமல் இருக் கின்றன. அதற்கும் கட்டடம் அமைப்பதற்குரிய ஏற்பாட் டினை அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா? அதோடு, தஞ்சை மாவட்டத் திலே 300 துணை சுகாதார நிலையங்கள் உள்ளன. அதில் 116ல் தான் இடைநிலை சுகா தாரப் பணியாளர்கள் நியமிக் கப்பட்டுள்ளனர். மீதமுள்ள இடங்களுக்கும் நியமிக்க அரசு முன் வருமா?

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: தஞ்சை மாவட்டத்திலிருக்கிற அத்துணை துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், எங்கெங்கே புதிய கட்டடங் கள் வேண்டுமோ அவைக ளெல்லாம் கண்டறியப்பட்டு, தொடர்ச்சியாக முன்னுரிமை அடிப்படையில் தொடர்ந்து கட்டித் தரப்பட்டுக் கொண்டி ருக்கிறது. தற்போது, கல்யா ணபுரம், செம்மங்குடி, விளாங்குடி, வரகூர், கூடநா ணல் மற்றும் செங்கிப்பட்டி ஆகிய 6 துணை சுகாதார நிலையங்க ளுக்கும் மன்ற உறுப்பினருடைய கோரிக் கையை ஏற்று, மிக விரைவில் முன்னுரிமை அடிப்படையில் கட்டடங்கள் கட்டித் தரப்ப டும்.

இவ்வாறு விவாதம் நடை பெற்றது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டிடம் கட்டும் பணியை காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் துவக்கி வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் சந்திரன், கே.ஆறுமுகம், சு.வெங்கடேசன், கே.திலகர், எஸ்.சந்துரு, வ.ஜெகநாதன், மாநகராட்சி உறுப்பினர் அன்பு, வணிகவரித்துறை இணை ஆணையர் மற்றும் வணிகவரித்துறை அரசு அலுவலர்கள் பொதுப்பணித்துறை EE ,JE மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஆலந்தூர் 100 அடி சாலையில் அமைந்துள்ள 167வது மாமன்ற அலுவலகத்தில் 05.04.2025 அன்று ஆதார் முகாம் நடைபெற்றது. இம்முகாமை 167-வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், மாமன்ற உறுப்பினர் துர்கா தேவி நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.